**<u>1. மனுவின் சுருக்கம்.</u>**

(i) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1-ம் பிரதிவாதி ஆவார். மேற்படி வழக்கில் மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக கடந்த 12.03.2025 அன்று இறுதியாக வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி வாய்தா தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பிலிருந்தே மனுதாரருக்கு வயிற்றுபோக்கு மற்றும் வாந்தி ஏற்பட்டு நாட்டு வைத்தியம் செய்து கொண்டு வீட்டிலேயே படுத்த படுக்கையாக இருந்ததால் மனுதாரரால் அவரது வழக்கறிஞரை தொடர்பு கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. இதனால் கடந்த 12.03.2025 அன்று மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதுரைக்காக நீதிமன்றத்தால் வாய்தா போடப்பட்டது.

(ii) இம்மனுவுடன் தனியாக மனுதாரர்/1-ம் பிரதிவாதி அவரது முதன்மை விசாரணைக்கான அஃபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். எனவே கடந்த 19.08.2025 அன்று வாதுரைக்காக போடப்பட்ட வாய்தாவை Re-open செய்ய வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையென்றால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும். எனவே இம்மனுவுடன் தனியாக தாக்கல் செய்யப்படும் மனுதாரர்/1-ம் பிரதிவாதியின் முதன்மை விசாரணை அஃபிடவிட்டை ஏற்று கொண்டு கடந்த 19.08.2025 அன்று வாதுரைக்காக போடப்பட்ட வாய்தாவை Re-open செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. 1-ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கடந்த 23.09.2025 அன்று இம்மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.09 18:30:43 +0530

